# புதியபூமி
## PUTHIYA POOMI

சுற்று 7 • 1993 பங்குனி - வைகாசி • விலை ரூபா 6.00 • சுழற்சி 3


### மீண்டும் வேதாளம் . . . .

இலங்கையில் முதல் தடவையாக பாராளுமன்றத்தால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வினை அடைய முன்முயற்சி எடுப்பாரா?

''தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறேன்''

''தமிழ்ப் பிரச்சினை என்று ஒன்றில்லை; பயங்கரவாதப் பிரச்சினை ஒன்றுதான் இருக்கிறது'' இவ்வாறு புதிய ஜனாதிபதி பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இதன் அர்த்தம் என்ன?

# புதிய தலைமையின் வெற்றியை உறுதிப்படுத்துவோம

மலையக தேசியம் பெற்றுவரும் எழுச்சியை சரியான தடத்தில் வழி நடத்திச் செல்ல சரியான தலைமையை பலப்படுத்த வேண்டும் அதன் மூலமாக சந்தர்ப்பவாதமோ அதிவிரவாதமோ இன்றி நிதானமான போராட்ட வழிமுறைகளில் மக்களை வழிநடத்திச் செல்ல வேண்டும். மலையக நலனில் அக்கறை கொண்ட சகல சக்திகளும் ஒன்றை ஒன்று அங்கீகரித்து பொதுவேலைத்திட்டத்தின்கீழ் ஐக்கியப்பட்டு போராட வேண்டும். இதுவே இன்று நம்முன்னுள்ள பிரதான கடமையாகும்.

மலையகத்தில் இருந்து வந்த யூ. என். பி. விசுவாசம் மிக்க தலைமைகளை வர்க்க விசுவாசத்திற்காக மக்களின் நலன்களை விட்டுக்கொடுத்த தலைமைகளை நிராகரித்து மக்கள் நலன்சார்ந்த தலைமையை தேர்ந்தெடுக்கப் போகிறார்கள்.

காலங்காலமாக மலையக மக்களின் உரிமைகளைப் பறித்துவந்த யூ. என். பி. அரசு மிக நாசூக்காக தோட்டங்களை தனியாரிடம் கையளித்ததன் மூலம் தன்னைக் குறிவைப்பதை தவிர்க்கமுயற்சிக்கிறது. ஆனால் மலையக மக்கள் ஏமாளிகளல்ல. மலையகத்தின் புதிய தலைமையினால் அரசியல் போதம் ஊட்டப்பட்ட மக்கள் - ஐக்கியத்தின் பலத்தின் சாதனைகளை அனுபவத்தில் கண்ட மக்கள் ஏமாந்துவிடப் போவதில்லை.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல் நாட்டின் முக்கியமான ஒரு திருப்பத்தை எதிர்நோக்கி நிற்கின்றது. ஒருபுறத்தில் யூ. என். பி. அரசும் அதன் அடிவருடிகளும் மறுபுறத்தில் இவர்களுக்கெதிரான பல்வேறு சக்திகளும் நிற்கின்றன.

யூ. என் பி. அரசு தனக்கெதிராக மக்கள் கொண்டுள்ள எதிர்ப்பினை திசை திருப்ப பல்வேறு வழிகளிலும் முயன்றுவருகின்றது. நாட்டின் பொதுத் தொடர்புச் சாதனங்களில் தனக்கு சாதகமாக — ஊதுகுழல்களாக செயற்படுபவைகளுக்கு சுதந்திரம் வழங்கியும்- எதிர்த்து நியாயம் கேட்பவர்களை ஜே. வி. பி., விடுதலைப் புலிகள் ஆதரவாளர் என்றும்நாட்டின் துரோகிகள் என்றும் பட்டம் சூட்டி பிரச்சாரம் செய்கின்றனர். ஜனாதிபதி அமைச்சர்கள் மந்திரிகள் எம். பி,க்கள் துணிவழங்குவதில் இருந்து பாதங்களில் விழுவது வரையிலான நடிப்புக்களை பக்கம் பக்கமாக - பல மணிக்கணக்காக பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பன அரசுக்குச் சேவை செய்கின்றன.

ஆனால் பத்திரிகைக்கு சீல் வைப்பு, பயமுறுத்தல் என்பவற்றில் இருந்து படுகொலை வரை எதிர்க்கட்சிகளுக்கு எதிராக அரசும் அரசுசார்பு சக்திகளும் செயற்படுகின்றன. இவற்றையெல்லாம் செய்துகொண்டும் ஜனநாயக ரீதியான - நேர்மையான தேர்தல் நடவடிக்கைகள் என வர்ணிக்ககவும் அவர்கள் தயங்கவில்லை.

'சர்வாதிகார ஜனதிபதி ஆட்சிமுறை, திறந்தவெளிப் பொருளாதாரத்தினால் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் சமூக கலாசார வாழ்வுகளின் அழிவு, இனப்பிரச்சினையின் தீர்வின்மை, மக்கள்மயம் என்ற போர்வையில் தனியுடைமையாக்கல் முதலியவற்றுக்கெதிரான கோரிக்கைககளைக் கொண்ட எதிர்க்கட்சிகள் அரசுக்கெதிராக நின்றபோதிலும் அவைகள் பொது வேலைத்திட்டத்தின்கீழ் ஒன்றிணைந்து மக்கள் நலனை முதன்மைப் படுத்தி களத்தில் இறங்கத் தவறிவிட்டன.

எனினும் யூ. என்.பி எதிர்ப்புச் சக்திகளையே மக்கள் ஆதரிக்கவேண்டும். பொதுவான நிலைமை இவ்வாறு இருந்த போதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் வாழ்வில் இது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றது என்பது முக்கியமானது. வடக்குக் கிழக்கில் எழுந்த விடுதலைப் போராட்டத்தின் காரணத்தால் அதனைத் தீர்த்துவைக்க இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை முறை அந்த மாகாணங்களில் நடைபெறாது மற்ற இடங்களில் நடப்பது ஒரு முரண் நிலையாகும்.

மற்ற இடங்களை எடுத்துக்கொண்டால் மலையகத்தில் இத்தேர்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. வளர்ந்து வரும் மலையகத் தேசிய எழுச்சிக்கு தலைமைகொடுக்க முடியாது பழைய தலைமைகள் திண்டாடுகின்றன. மலையக மக்களுள் காலத்துக்குக்காலம் அரசுகள் இழைத்த கொடுமைகளுக்கு வக்காலத்து வாங்கிய தலைமைகளை நிராகரித்து முன்செல்கிறார்கள்.

கடந்த 15 ஆண்டுகள் தொடர்ச்சியாக சர்வவல்லமை கொண்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியையும் வைத்து ஆண்டு கொண்ட யூ.என்.பி. இ.தொ.க. அரசு மலையக மக்களுக்காக சாதித்தது என்ன. தனியார் துறையினரின் அட்டூழியங்களுக்கு எதிராக காலங்காலமாக போராடி பல உயிர்களைத்தியாகம் செய்து அத்தியாகத்தின் ஊடே பெற்றுக்கொண்ட உரிமைகள்கூறி மீண்டும் மக்கள் மயம் என்ற தனியார் மயத்தினால் பறிக்கப்பட்டுள்ளது. தோட்டத்தொழிலாளிக்கு வேலை நாட்குறைக்கப்பட்டுள்ளது. வேலையும் இன்றி இருப்பதற்கு வீடுமின்றி சிறு கொட்டிலாவது போடுவதற்கு நில உரிமையின்றி வாழ்வுரிமை இன்றி அல்லல் படுகிறார்கள்.

நிரந்தரமான வாழ்விடம் இன்றியே இந்த நாட்டின் வளர்ச்சிக்காக தம் வாழ்வை பரம்பரை பரம்பரையாக சுமார் இரு நூற்றாண்டுகள் அர்ப்பணித்த மக்கள் தாம் இந்த நாட்டின் பிரஜைகள்; இந்த நாட்டின் தேசிய சிறுபான்மை இனம், தாம்வாழும் பிரதேசத்தில் சிறப்பான வாழ்வை நிர்மாணிக்க உரிமையுண்டு; அதற்காக சுயநிர்ணய அடிப்படையில் சுயாட்சி அமைப்புக்கள் வேண்டும் என்று கேட்கிறார்கள். இதனைப்பெறுவதற்கு தொழிற்

(4ம் பக்கம் பார்க்க)

## தொடரும் படுகொலைகள்

# நாட்டின் சுதந்திரத்துக்கு ஆபத்து.

அரசியற்படுகொலைகளின் உச்சத்தில் எமது நாடு ஜனாதிபதியையே பறிகொடுத்துவிட்டது. இதற்கு மேலும் தனிநபர், அரசியற்படுகொலைகள் இடம்பெற்றால் எமது நாடு தாங்காது. இவ்வாறான அரசியற்படுகொலைகள் தொடருமாயின் நாம் எமது நாட்டையே இழக்க நேரிடும். என்று புதிய ஜனநாயகக் கட்சி, ஜனாதிபதி ரணசிங்கபிரேமதாஸ அவர்களின்படுகொலையை அடுத்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இக்கட்டத்திலாவது அரசாங்கமும் அரசியற்கட்சிகளும், நாட்டு பிரஜைகளும் ஒன்றுபட்டுநல்லதொரு ஜனநாயக சூழ்நிலையை கட்டி வளர்ப்பதன் மூலம் அநாசரீகமான அரசியற்படுகொலைகளை தடுத்து நிறுத்தபாடுபட வேண்டும், என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய-ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளரும் மாகாணசபை தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் தேனீர் கோப்பை சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழுவின் தலைவருமான சட்டத்தரணி இ. தம்பையா விடுத்துள்ள அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நாட்டின் ஜனாதிபதியையே பலியெடுக்கும் அளவிற்கு அரசியல், தனிநபர் படுகொலைகள் தலைவிரித்தாடுகின்றன. இவ்வாறான அரசியற் படுகொலைகளினால் நாட்டில் அரசியல் ஸ்திரமின்மையே ஏற்படும்.

அரசியற் படுகொலைகள் அநாகரிகமான தவறானவழிமுறை என்பதால் புதிய ஜனநாயக கட்சி அரசியற்படுகொலைகளை கண்டித்தே வந்திருக்கிறது.

நாகரிகமற்ற அரசியற் சமூகத்தில்தான் அரசியற்படுகொலைகள் இடம்பெறும். அவற்றை தடுத்துநிறுத்தவும் அரகியல் மாற்றங்களுக்காக ஜனநாயக வழிமுறைகளையும், நெறிமுறையான வழிமுறைகளையும் கையாளக்கூடிய சாத்தியமான அரசியற்சூழ்நிலையை ஏற்படுத்தவும் அதன் மூலம் ஒரு நாகரிகமான அரசியற்சமூகத்தை கட்டிவளர்க்கவும் பாடுபட வேண்டும்.

தனிநபர், அரசியற்படுகொலைகள் நடைபெற்றபோதெல்லாம் அவற்றை கண்டித்து வந்ததுடன், அவை ஏற்படுவதற்கான சூழ்நிலையை கண்டறிந்து அவற்றுக்கு தீர்வுகாணவேண்டும் என்றும் எமது கட்சிவலியுறுத்தி வந்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீனிவாஸ மஹாத்மியம்

சமஷ்டி பற்றித் திரு(யார் இந்த?)ஸ்ரீனிவாசன் வைத்த கோரிக்கையின் சாராம்சம் வடக்கு கிழக்கு இணைப்பின் மறுதலிப்பே வடக்கு கிழக்கு இணைப்பில்லாததீர்வுகளைச் சிங்களப்பேரினவாதம் ஏற்கத் தயாராக உள்ள போது ஸ்ரீனிவாசன், அவர்கட்கு வசதியான தீர்வைமுன் வைத்தார். திரு. தொண்டமான் கூட நிராகரிக்கும் தீர்வை இந்த ஸ்ரீனிவாசன் முன்வைத்தார் என்றால் இதற்குப் பின்னால் ஏதோ விஷயம் இருக்க வேண்டும்.

எது விதமான ஸ்தாபன அடிப்படையோ வெகுஜன ஆதரவோ இல்லாத ஒரு தனிநபர் முன் வைத்த ஒரு யோசனை எவ்வாறு இவ்வளவு பிரசித்தி பெற்றது? எந்த ஒரு விடுதலை இயக்கத்தின் கருத்துக்கும் தரப்படாத முக்கியத்துவத்தை அரசாங்க சார்ப்பு ஏடுகள் எவ்வாறு இதற்கு வழங்கின. ஸ்ரீனிவாசனின் யோசனைகள் உண்மையில் அவருடையவை தானா அல்லது நிறைவேற்றவல்ல அதிகாரமுள்ள ஒருவரது குரலாக அவர் செயற்படுகிறாரா?

நாட்டின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான நெருக்கடியைப் பெறுத்தவரை ஸ்ரீனிவாசனதுகருத்துக்கள் எதுவித முக்கியத்துவமுமற்றவை. அரசாங்கம் தனது அடக்குமுறை இன ஒழிப்பு யுத்தத்தை நிறுத்துவதும் தமிழ் மக்களதும் சகல சிறுபான்மை இனத்தவர்களதும் சுயநிர்ணய உரிமையை ஏற்க ஒப்புக் கொள்ளுவதுமே நிலைக்கக் கூடிய தீர்வுக்கு வழிவகுக்கும்.

தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய தீர்வை முன்வைக்காமல் இரவல் ஒலி பெருக்கிகள் மூலம்ஆழம் பார்ப்பதும் விடுதலைப் போராட்டத்தைக் காரணம் காட்டி ஜனநாயக மனித உரிமை மறுப்பதை தொடர்வதுமே அரசாங்கத்தின் நோக்கமானால் இனப்பிரச்சனையின் தீர்வு இந்த ஆட்சியின் முடிவு மூலமே சாத்தியமாகும்.

# நியூ யோக்கிலும் ஒரு நில அதிர்வு

நியூ யோக்கின் உலக வர்த்தக கேத்திரக் கட்டிடம் உலகில் இரண்டாவது உயரமான கட்டிடம். அதன் கீழ் மட்டத்திலிருந்த வாகனத் தரிப்பிடத்தில் வைக்கப்பட்ட ஒரு குண்டு கணிசமான சேதத்தையும் பலருக்குக் காயத்தையும் சில மரணங்களையும் ஏற்படுத்தியது. இக் குண்டு எகிப்தியக் கடவுச் சீட்டையுடைய ஒரு பாலஸ்தீனியரால் வைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. என்றுமே இந்தப் பயங்கரவாதம் பிரச்சினைகளைத் தீர்த்ததில்லை ஆயினும் அமெரிக்கா இஸ்ரேலுக்கு அளித்துவரும் நிபந்தனை அற்ற ஆதரவு காரணமகவே பலஸ்தீன மக்கள் மேலும் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர். லெபனானில் ஆட்கடத்தல்களும் மேனாட்டவரை பணயக் கைதிகளாகப் பிடித்துவைப்பதும் நடந்தமைக்கும் பாலஸ்தீன மக்களது நிர்க்கதியான நிலையே காரணம். நியாயமான போராட்டங்கள் நசுக்கப்படும்போது மக்களின் ஒரு பகுதியினர் இவ்வாறான நடவடிக்கைகளால் கவரப்படுவது இயல்பானது.

நானூறு பலஸ்தீனியரை சட்ட விரோதமாக நாடுகடத்திய இஸ்ரேலின் பயங்கரவாதத்தை அடக்கத் திராணியற்ற அமெரிக்காவும் அதன் கைப்பிடியில் ஆகப்பட்டுள்ள ஐ. நா. சபையும் பயங்கரவாதத்தை ஒழிப்பது பற்றிப் பேசிப் பயனில்லை. பாரிய தவறுகட்கெதிரான நியாயமான போராட்டங்களை தயவின்றி நசுக்குவோரே முக்கியமான பயங்கரவாதிகள். அவர்கள் முதலில் அடக்கப்படவேண்டும்,

இந்த குண்டு வெடிப்பு அமெரிக்காவில் அரபுவிரோத உணர்வுகளை மீண்டும் கிளறிவிட்டுள்ளது. எனினும் பலஸ்தீன மக்களுக்கு நியாயமான தீர்வுடனேயே மத்திய கிழக்கில் சமாதானம் சாத்தியமாகும் என்ற உண்மையும் அமெரிக்கா உலகின் அமைதியைக் குலைத்துக்கொண்டு தன் எல்லைகட்குள் அமைதியாக இருக்கமுடியாது என்ற உண்மையும் இப்போது மெல்ல மெல்ல அமெரிக்கர்கட்கு விளங்குகின்றன.

# அரசர் ஜார் பொறிஸ் யெல்ற்சின்?

சோவியத்கம்யூனிஸ்ட் கட்சி ஒரு க்ருஷ்ச்சொவைத் தந்த பிறகு ப்ரெஷ்னெவ் கொர்பச்சொவ் என்று வரிசையாக மாக்ஸிய விரோதிகளை உலகுக்குத் தந்தது. சோவியத் யூனியனின் உடைவுக்குக் காரணமான இந்த மாக்ஸிய விரோதிகளின் வரிசையில் கொடு முடியாக யெல்ஷின் வந்தார். ரஷ்யாவை ஒரு முதலாளித்துவ நாடாக மட்டுமின்றி ஏகாதிபத்திய வாதிகளின் பாதந் தாங்கியாகவும் மாற்ற அவர் தன்னாலியன்றதைச் செய்தார். அவர்களின் முயற்சிகளின் விளைவாக ரஷ்யாவின் பொருளாதாரம் முன்னேறவில்லை. மாறாக மக்கள் பலரும் அஞ்சியது போல கள்ளச் சந்தை குற்றச் செயல்கள் மாஃபியா போன்ற குற்றவியற் கும்பல்கள் பெருகின சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்தன விலை வாசிகள் பயங்கரமாக ஏறின பொருட்களின் தட்டுப்பாடு மோசமாகியது இதன் விளைவாக யெல்ஷினுக்கு எதிர்ப்பு அதிகரித்தது சென்ற வருட முடிவில் தனது பொருளாதாரத் சீர்திருத்தங்களை மேலும் துரிதப்படுத்தும் முனைப்பில் தனது அதிகாரங்களை அதிகரிக்கும் முயற்சியில் இறங்கிய போது ரஷ்ய பாராளுமன்றம் தடையாக நின்றது யெல்ஷின் மிரட்டல்கள் எதிர்விளைவையே ஏற்படுத்தின மார்ச் மாதம் யெல்ஷின் தனது அதிகாரங்களை பன்மடங்கு அதிகரிக்குமாறு விடுத்த கோரிக்கையை பாராளுமன்றத்தின்ஏகப்பெரும்பான்மையால் முறியடிக்கப்பட்டது. யெல்ஷ்ஸின் ஒரு இராணுவ சர்வதிகார ஆட்சியை நிறுவ முனையும் வாய்ப்பு உள்ளது: ஆயினும் இவரது கடந்தகால நடவடிக்கைகள் காரணமாக அவருக்கு ராணுவ ஆதரவு அதிகமில்லை. ரஷ்யப் பாராளுமன்றத்தில் உள்ளதை விடவும் பலமான எதிர்ப்பு அதற்கு வெளியே உள்ளது ரஷ்யாவின் தேசிய வாதிகளும் திரிவு வாதக் கட்சியினரும். இப்போது யெல்ற்சினுக்கு எதிராக இணைத்துள்ளனர் இவர்களால் ஒரு வெகுஜன இயக்கத்தை வழிநடத்த முடிமா என்பது பிரச்சினைக்குரியது- ஆயினும் ரஷ்யாவின் அரசியல் நெருக்கடி ஒரு புதிய மக்கள் ஜனநாயக புரட்சிகர இயக்கத்திற்கு இட்டுச் செல்லும் நிலை வெகு தொலைவில் இல்லை.

# ஹிற்லரின் வாரிசுகள்

குடியரசுக் கட்சி என்று தன்னை அழைத்துக் கொள்ளும் ஜெர்மன் நவநாஸிசக் கட்சி அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் 15 வீதம் வரையிலான வாக்குகளைப் பெற்றது. கிழக்கு ஜெர்மனியின் பொருளாதார நலிவு அங்கு வலதுசாரிகளின் எழுச்சிக்குக் காரணம் என்றால் இம்முறை ஓரளவு நல்ல பொருளாதார நிலையில் உள்ள பிராங்ஃபுர்ட் நகரிலும் இவர்கள் கணிசமான ஆதரவு பெற்றுள்ளனர். ஜெர்மனியின் பொருளாதாரம் பின்னடைவு பெற்றுள்ளதால் ஏற்பட்ட அதிருப்தியே இதன் காரணம்.

இந்த வலதுசாரிகளின் தேர்தல் கோஷம் 'அந்நியர்கள் வேண்டாம்' என்பது தான். இவ்வளவு காலமும் ஜெர்மனியின் பொருளாதார எழுச்சிக்கு அயல் நாடுகளில் இருந்து வந்தவர்கள். முக்கியமாக துருக்கியர், மிகவும் பயன் பட்டனர் இப்போது பொருளாதார நெருக்கடியும் வேலையின்மையும் அந்நியர்க்கு எதிரான உணர்வுகளை கிளறிவிட்டுள்ளன. குடியரசுக் கட்சியின் தலைவர், எஸ். எஸ். எனும் நாஸிகளின் அரசியல் இராணுவப் படையின் முன்னாள் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெர்மன் சோஸலிசக் கட்சி இனவாதத்துக்கெதிரான உறுதியான நிலைப்பாடு எடுப்பதற்கு மாறாக இனவாதிகளது கூக்குரலுக்குப் பணிந்து அயலார் குடிவரவு அகதிகள்வரவு போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் அரசாங்கத்தின் போக்கையே கட்டுப்படுத்துகிறது. ஐரோப்பாவின் சோஷலிஸ வாதிகட்கும் முதலாளித்துவ கட்சிகட்கும் உள்ள ஒரே வேறுபாடு யார் முதலாளித்துவத்தைக் காப்பாற்ற வல்லவர் என்ற பிரச்சினை தொடர்பானதே. தொழிலாளர் வர்க்க கண்ணோட்டமில்லாத சோஷலிஸவாதிகள் வலதுசாரிப் பிரச்சார சாதனங்கள் கையில் ரொட்டிமா போல வேண்டியபடி பிசையப்படுகிறார்கள்: இவர்களைப் பயமுறுத்தியே வலதுசாரிகள் தங்கள் நினைத்ததைச் சாதிக்கமுடியும்.

## சம்பவங்களும் அதன் போக்குகளும்

அவதானி

# ஊர் இரண்டுபட்டால்

மக்கள் பிளவுபட்டால் சர்வாதிகாரிகட்குக் கொண்டாட்டம்; ஏகாதிபத்தியவாதிகட்குக் கொண்டாட்டம், இலங்கையின் சர்வாதிகார ஆட்சி தன் பிழைப்புக்கு முழுக்க முழுக்க எதிர்க்கட்சிகளின் மோதல்களையும் உட்கட்சிப் பிளவுகளையுமே நம்பியிருக்கலாம்.

அரசாங்கம் தன்னை அதிகாரத்திற் தக்க வைக்க எந்த வித ஊழலிலும் அடக்கு முறையிலும் இறங்கத் தயங்காது என்ற உண்மையைச் சகல எதிர்க் கட்சிகளும் அறியும். எனினும் இந்த அரசாங்கத்தைப் பதவியிறக்கக்கூடிய ஒரு குறைந்தபட்ச வேலைத் திட்டத்தையாவது முன் வைக்க இவர்களால் முடியவில்லை,

பதவிகளும் பணம் சேர்க்கும் நோக்கமுமே பெருவாரியான பாராளுமன்ற அரசியல் வாதிகளை இயக்குகின்றன' பாராளுமன்ற, உள்ளூராட்சித் தேர்தல்கட்கு வெளியிலும் அரசியல் இருக்கிறது. அந்த அரசியலை வளர்த்தெடுப்பதேன் மூலமே மக்களைப் பிளவுபடுத்தி அதிகாரத்தில் நீடிக்கும் சர்வாதிகார ஆட்சியை அகற்ற முடியும்.

குடும்பச் சண்டைகளையும் தனிப்பட்ட கோபதாபங்களையும் பதவிப் போட்டிகளையும் ஒதுக்கிவிட்டு மாகாண சபைத் தேர்தலிலாவது தம்மால் பொது எதிரிக்கு மாறாக இணைய முடியும் என்று எதிர்க்கட்சிகள் நிலை நிறுத்தத் தவறினால் மக்கள் அவர்கள்மீது நம்பிக்கை இழப்பது உறுதி.

(5ம் பக்கம் பார்க்க)

# மாகாணசபைக்கு சென்று மலையக மக்களின் ஆகக்குறைந்த உரிமைகளுக்காவது குரல் எழுப்ப முடியும்

-தேசிய அமைப்பாளர் பேட்டி-

நடைபெறவுள்ள மாகாண சபை தேர்தலில் உங்களது புதிய - ஜனநாயக கட்சியின் நிலைப்பாடு என்ன?

தேசிய ரீதியாக நாங்கள் எல்லா மாகாணங்களிலும் போட்டியிடவில்லை. ஆனால் மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுகிறோம்.

ஒரு தேசிய சிறுபான்மை இனமான மலையக மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதனை நோக்கமாக கொண்டே நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுகிறோம்.

வேறு மாகாணங்களில் வேறேதாவது கட்சியை அல்லது குழுவை ஆதரிக்கிறீர்களா?

தேசிய ரீதியாக போட்டிடும் எந்த ஒரு கட்சிக்கும் மலையக மக்களின் உரிமை பற்றியோ, வடக்கு கிழக்கு பிரச்சினை பற்றியோசரியான வேலைத்திட்டமோ தீர்மானமோ இல்லை. மாகாணசபை என்பது இந்நாட்டின் சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதி செய்யும் நோக்கிலேயே ஏற்படுத்தப்பட்டது. ஆனால்அந்த சபைகளின் தேர்தலில் போட்டியிடும் எந்தக்கட்சிக்கும் சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றி தெளிவான நிலைப்பாடு எதுவுமே இல்லை. அத்துடன் பொது எதிரியான யூ.என்.பிக்கு எதிரான எல்லா அமைப்புகளும் ஒருபொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்படத் தவறிவிட்டன.

அதனால் நாம் எந்தக்கட்சியையும் ஆதரிக்கவில்லை. ஆனால் யு. என். பியை தோற்கடிக்க சக்தியுள்ள யூ. என். பி. க்கு எதிரான அமைப்புகளுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நுவரெலியா மாவட்டத்தில் எட்டு அமைப்புகள் போட்டியிடுகின்றன அதில் ஏழு அமைப்புகளும் யு.என். பிக்கு எதிரான அமைப்புகளாகும். ஏன் அவை ஒன்றிணைந்து போட்டியிடவில்லை

மலையக மக்கள் நலன் சார்ந்த அமைப்புகள் யாவும் ஒரு பொதுவேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட வேண்டும் என்பதனை எமது கட்சி வலியுறுத்தி வந்தது. அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

ஆனால் நேர்மையான பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட எந்த அமைப்பும் முன்வரவில்லை.

அதனால்தான் மலையகமக்கள் அமைப்புகள் ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மக்கள் முன்வைத்து, மக்களின் ஆணையை பெறுவதற்காக எமது கட்சி நுவரெலியா மாவட்டத்தில் சுயேட்சையாக தேனீர் கோப்பை சின்னத்தில் போட்டியிடுகின்றது,

மலையக மக்களின் நலனை உயர்த்திப்பிடிக்கும் அமைப்புகள் ஐக்கியப்படாதது மக்களுக்கு பாதகமாக அமையும்?

நிச்சயமாக பாதகமாகவே அமையும். ஐக்கியப்பட வேண்டிய நேரத்தில் ஐக்கியப்படாதது மக்களுக்கு செய்யும் பெரும் துரோகமாகும்.

எமது கட்சி ஐக்கியத்துக்கு மாறானதல்ல ஏனைய கட்சிகள் ஐக்கியப்பட்டு ஓரணியாகிஇருக்கின்றபோது அதற்கு மாறாக எங்களது கட்சி தனியாக நின்றால் அது மக்களுக்கு செய்யும் பெரிய துரோகமாகும்.



பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட எந்த அமைப்பும் முன்வரவில்லை

ஆனால்ஐக்கியத்துக்கான விருப்பமே இல்லாது எல்லோரும் தேர்தலுக்கு லிஸ்ட் போடவும்,தங்களைத்தாங்கள் முதன்மை படுத்துவதிலுமே அக்கறை செலுத்தினர்.

அந்நிலையில் ஐக்கியத்தை முதன்மைப் படுத்தி மக்களின் ஆணையை பெற முன் வந்திருக்கும் எங்களது கட்சியின் நேர்மையை மக்கள் அறிவார்கள்.

> எங்களது கொள்கையையும் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் மக்கள் முன் வைத்திருக்கிறோம். எங்களது நடைமுறைகளை மக்கள் அறிவார்கள். மக்கள் எங்களை வெற்றி பெறச் செய்வார்கள்.

மாகாணசபையில் உறுப்பினர்களாக வந்து மலையக மக்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

மாகாண சபையின் கீழ் மலையக மக்களின் ஆகக் குறைந்த உரிமைகளாவது உறுதிசெய்ய குரல் எழுப்ப முடியும். அதிலிருந்து மேலும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் மலையகமக்களுக்கு சுயாட்சி உள்ளமைப்பு, உப உள்ளமைப்புகள் என்பவற்றைப் பெறவதற்கான பாதையில் முன்னேற முடியும்.

மலையக மக்கள் என்றால் யானைக்கு ஒட்டுப் போடுபவர்கள் என்று கூறப்படுகிறதே?

அதுமுற்றும் பிழையானது. தேர்தல் களத்தில் இருக்கும் கட்சி உறுப்பினர்களின் கருத்துப்படி மலையக மக்கள்அனைவரும் யூ.என்.பி. இ. தொ. கா. என்பவற்றுக்கு எதிரான கருத்தையே கொண்டுள்ளனர்.

இந்த மாகாணசபைதேர்தலில் யூ. என். பிக்கு மலையக மக்களின் வாக்குகளை பெற முடியாது.

உங்களது கட்சியின் பலம் எப்படி இருக்கிறது?

நிச்சயம் எங்களுக்கு வெற்றி கிட்டக் கூடிய சூழ் நிலையே இருக்கிறது. நாங்கள் மக்கள் மத்தியில் நேர்மையான அரசியலை செய்து வருகிறோம்.

யாரிடமும் காசு வாங்கிக் கொண்டு யாரிடமும் கூட்டு சேரவில்லை.தேர்தலில்போட்டியிட சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்பதற்காக தனிக் கட்சி அமைக்கவும் இல்லை.

நம்பிக்கையுடன் எங்கள் கட்சியில் அணிதிரண்ட மக்களை நடுவீதியில் விட்டுச் செல்லவும் இல்லை.

சாதி சண்டையை ஊக்குவிக்கவும் இல்லை. தோட்டத் தொழிலாளர்களுக்குஎதிரான கொள்கையும் நடைமுறையும் கொண்ட தேசியகட்சிகளுக்கு முண்டு கொடுக்கவுமில்லை.

எங்களது கொள்கையையும் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் மக்களின் முன் வைத்திருக்கிறோம். எங்களது நடைமுறையும் மக்களுக்குத் தெரியும். மக்கள் எமது பக்கமே இருக்கிறார்கள்.

ஆகவே மக்கள் எம்மை வெற்றி பெறச்செய்வார்கள்.

# அங்கு வீடு திறப்பு இங்கே வீடு உடைப்பு

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா டக்காவில்நடைபெற்ற சார்க்மாநாட்டின் பொருட்டான சுற்றுப்பயணத்தின் போது புத்த காயாவுக்கும் விசயம் செய்தார். அங்குள்ள ஏழைமக்கள் நூறு பேருக்கு வீடுகளைக் கையளித்தார். மேலும் லும்பினியில் 100 வீடுகளைக்கட்டி ஏழைகளுக்கு கையளிக்கப்போவதாக அறிவித்தார். இந்தப் புண்ணிய கைங்கரியத்தின் மூலம் ஏழைகளின் தோழன் என்றும் வீட்டில்லாப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் விண்ணன் என்றும் உலக அரங்கில்பெயரெடுக்க ஜனாதிபதி பெரு முயற்சி எடுக்கின்றார்.

கொழும்பு நகரில் கூட வீதியோரங்களிலும், மரங்களின் கீழும் பாலத்தின் கீழும் புறாக் கூட்டுக்குள்ளும் வாழ்வு நடத்தும் மக்கள் அவரின் கண்களுக்குத் தெரியவில்லை.

அதையும் விட மேலாக வடக்கு கிழக்கில் விடுதலை நடவடிக்கை என்றபெயரால் நாளாந்தம் குண்டு வீச்சினாலும் ஷெல் தாக்குதலினாலும் வீடுகள் அழிக்கப்படுவதையும் கைப்பற்றிய பிரதேசங்களில் இராணுவ நடவடிக்கைகளுக்கு வசதியாக வீடுகள் தகர்க்கப்படுவதையும் நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி அவர் எதுவும் சிந்திக்க வில்லை. வீடுகள் உடைப்பது நல்லது என நம்புகிறார் போலும்.

வீடு வாசல்களை இழந்து அகதிமுகாம்களிலும் காடுகளிலும் தங்கி இருக்கும் மட்டக்களப்பு மக்கள் தமக்கு புனர் நிர்மாணம் கோரி—கொட்டும் மழையிலும் நீண்ட கியூவிலும் நின்று நடமாடும் ஜனாதிபதி செயலகத்துக்குச் சென்று விண்ணப்பம் சமர்ப்பித்த போது அதற்கான நடவடிக்கைக்கு எதுவும் செய்யாமல் விண்ணப்பம் பெற்றகையோடு திருப்பி அனுப்பப்பட்டு ஏமாற்றத்துக்கு உள்ளாகினர்.

அரசு தன்னால் மீட்கப்படாத பகுதிகளில் இராணுவத்தின் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் புனர் நிர்மான வேலை எதுவும் நடப்பதை நிறுத்தியுள்ளது. ஏனெனில் தாம் திரும்பவும் உடைக்க வேண்டிவரும் அதனால் இரண்டாவது தரமும் நட்டஈடு கொடுக்க வேண்டிவருமே எனச் சிந்திக்கிறார்கள். ஆனால் உடமைகளை இழந்து இருக்க இடமின்றி அலையும் மக்களுக்கு நிவாரணம் வேண்டும் என சிந்திக்கவில்லை.

இந்த மக்கள் எங்கேவாழ்வது? தமது சொந்த வீடுகளில் வாழும் உரிமை இல்லையா? சொந்த நாட்டுமக்களின் உடமைகளை - வீடுகளை அழித்து ஒரு பாடம் புகட்டி வழிக்குக் கொண்டுவர முனைந்திருக்கும் சர்வ வல்லமையுள்ள ஜனாதிபதியின் வேஷம் உலக மக்கள் முன் எடுபடாது.

# பொது வேலைத்திட்டத்தின் கீழ் சகல அமைப்புகளும் ஒன்றுபட வேண்டும்

**புதிய ஜனநாயக கட்சி எதிர்வரும் மே. 17ல் நடைபெற இருக்கும் மாகாண சபைத்தேர்தலில் நுவரெலியாமாவட்டத்தில் சுயேட்சைக் குழுவாக போட்டியிடுகிறது. அக்கட்சி ஏன் போட்டியிடுகிறது என அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறது. அவ்வறிக்கையின் சுருக்கம் வருமாறு:**

மலையக மக்கள் ஒரு தேசிய சிறுபான்மை இனம். அவர்களின் இன உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் பார்க்கும்போது எதிர்வரும் மாகாணசபை தேர்தல் மலையக மக்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமான தொன்றாகும்.

எனவே தான் இருக்கின்ற மாகாணசபைகளில் மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தை கூடிய மட்டும் அதிகரித்து, மாகாணசபைகளில் மலையக மக்களின் ஆகக்குறைந்த உரிமைகளையாவது உறுதிசெய்ய ஐக்கியப்பட்டு குரல் எழுப்ப வேண்டும் அதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு புதிய ஜனநாயக கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டது.

மலையக அமைப்புகள் ஐக்கியப்பட்டு மலையக மக்களின் அடிப்படை பிரச்சினைகளை ஒரு பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் வென்றெடுக்கும் பாதையில் முன்னேற இந்த மாகாண சபை தேர்தலை ஒரு படியாகக்கொள்ளவேண்டும் என்றே புதிய ஜனநாயக கட்சி விரும்பியது. ஆனால் மலையக மக்கள் நலன் சார்ந்த அமைப்புகள் யாவும் அவற்றின் தொழிற்சங்க பாதையிலிருந்து சிறிது தானும் முன்னேற தயக்கம் காட்டுகின்றன.

அதேவேளை மலையக மக்களின் நலனில் அக்கறை கொண்ட ஓரிரு அமைப்புகள் நடைபெறவுள்ள மாகாண சபை தேர்தலில் மலையக மக்கள் அமைப்புகள் யாவும் ஐக்கியப்பட்டு ஓரணியாக போட்டியிட வேண்டும் என்று கூறிவந்தன.

எனினும் ஐக்கியம் பற்றி பேசியதெல்லாம் வாயளவில் மட்டும் தான். தேர்தலுக்கு வேட்பாளர் பட்டியலில் தயாரிப்பதிலும் அவர்களின் எதிர்காலத்தை முதன்மைப்படுத்துவதிலுமே அக்கறைகொண்டனர்.

மலையக மக்களின் அடிப்படை வேலைதிட்டத்தின் அடிப்படையில் ஒன்று சேர நேர்மையாக முன்வரவில்லை.

ஆனால் மலையக மக்கள் தொழிற்சங்க வேறுபாடுகளை மறந்து அரசியல் ரீதியாக ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என்றே விரும்புகின்றனர்.

மலையக மக்களின் நலனில் அக்கறையுள்ள அமைப்புகள் யாவும் மலையக மக்களின் நலனை உயர்த்திப்பிடித்து முதலில் ஒன்றையொன்று அங்கீகரிக்க வேண்டும். ஒன்றினது தனித்துவத்தை மற்றயது அங்கீகரித்தல் வேண்டும். பிறகு ஒரு பொதுவேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்றிணைய வேண்டும்.

இப்போதுள்ள நிலமையை மாற்றி மலையக மக்கள் அமைப்புக்கள் ஒன்று பட்டு மலையக மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கும் பாதையில் முன்னேற வேண்டும். மக்களின் அந்த விருப்பத்தை முன்னெடுக்க மக்களின் ஆணையை பெற வேண்டும் என்றே புதிய ஜனநாயககட்சி மாகாண சபை தேர்தலில் பங்கெடுக்கிறது.

புதிய-ஜனநாயக கட்சி ஆரம்பகாலத்திலிருந்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்று இயங்கிய காலம் தொட்டு எமது நாட்டில் நடைபெற்ற தேர்தல்களில் நேரடியாக போட்டியிடாமல் ஆனால் அந்தந்த விஷேட நிலைமைகளுக்கு ஏற்ப மக்களின் நலனை முதன்மைப்படுத்தி பங்கெடுத்து வந்துள்ளது. சில தேர்தல்களில் புதிய ஜனநாயக கட்சி அதன் சிநேக பூர்வமான சக்திகளை ஆதரித்து வந்துள்ளது என்பதை யாவரும் அறிவார்கள்.

நடைபெறவுள்ள மாகாணசபை தேர்தல், நேரடியாக போட்டியிட்டு அதன் மூலம் மக்கள் நலன்சார்ந்த பங்களிப்பை செய்வதென்று கட்சி ஏற்கனவே தீர்மானித்திருக்கவில்லை. ஆனால் மலையக நிலைமைகள் காரணமாய் எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் மலையகத்தில் மத்திய மாகாணத்தில் நுவரெலிய மாவட்டத்தில் புதிய-ஜனநாயக கட்சி சுயேட்சையாக போட்டியிட்டு நேரடியாக பங்கெடுக்க வேண்டிய அரசியல் நிர்ப்பந்தத்திற்குள்ளானது என்பதை அறியத்தருகிறோம்,

எனவே புதிய-ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ. தம்பையாவின் தலைமையிலான சுயேட்சை குழு 1 இற்கு, 'தேனீர் கப்' சின்னத்திற்கு அளிக்கும் வாக்குகள் யாவும் சகல மலையக அமைப்புகளும் ஒருபொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒன்றுபட வேண்டும் என்பதற்கான ஆணையாகும்.

---

## சுயேட்சை குழு 1 ஐ வெற்றி பெறச் செய்வோம்

★ மலையகத்தின் ஐக்கியத்தை கட்டியெழுப்ப

★ மலையக மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க

★ தனியார் கம்பெனிகளின் அட்டூழியத்தை எதிர்த்துப் போராட

★ புதிய அரசியல் தலைமையைப் பலப்படுத்த

**மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் தேனீர்க்கோப்பை சின்னத்தில் போட்டியிடும்**

**இல: அபேட்சகர்கள்**

1. அஞ்சன் கோவிந்தசாமி
2. இளையதம்பி தம்பையா
3. ஒந்தன் செல்வராஜா
4. ஜெகநாதன் சற்குருநாதன்
5. ஜெபமாலை மாரிமுத்து
6. பழனிவேல் ராஜரட்னம்
7. பழனிவேல் சபீத்குமார்
8. பெரியசாமி அழகுராஜா
9. பெருமாள் சத்தியசீலன்
10. பொன்னையா கனகரட்னம்
11. பொன்னையா தமிழ்வாணன்
12. பொன்னுசாமி சுப்பிரமணியம்
13. முத்து ஜெயராஜ் / பத்மநாதன்
14. மெய்யப்பன் ஆறுமுகம்
15. வடிவேல் ஜெயராமன்
16. சித்திரன் வடிவேல் கதிரேசன்
17. சின்னகருப்பன் டேவிட்
18. செலம்பரம் செல்வராசு
19. திருமதி. சிதையம்மாள் பத்மநாதன்
20. ஹிக்கடுவ விதானராழளாகே காமினி சேனாரட்ன

**புதிய ஜனநாயக கட்சி**

---

## புதிய . . .

1ம் (பக்கத் தொடர்ச்சி)

சங்க வழிமுறைகள் அல்ல தேவையானது ; அரசியல் வழிமுறைகளே என சிந்திக்கிறார்கள். அதற்காக தம்மிடையே பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் இளம்தலைமுறையினரை கஷ்டத்துக்கும் மரணத்துக்கும் அஞ்சாது தியாக சிந்தனையுடன் உழைக்கக் கூடிய அரசியல் தலைமையை இனங்கண்டுள்ளனர். தமது அன்றாட தேவைக்கான போராட்டங்களில் முகங்கொடுத்து முன்னின்ற தலைமையை நோக்குகிறார்கள் கடந்த 15 வருடங்களாக தேசபக்த வாலிபர் இயக்கமாக ஆரம்பித்து புதிய ஜனநாயகக் கட்சியாக வளர்ந்துவிட்ட அந்த அரசியல் இயக்கத்துடன் தோழோடு தோழ் சேர்ந்து தமது உரிமைகளை வென்றெடுக்க- அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க அணியணியாக திரள்கிறார்கள்.

வளர்ந்துவரும் மலையக தேசிய எழுச்சியின் பிரதிபலிப்பாக அமையப்போகிறது இந்த மத்தியமாகாணத்தின் நுவரெலியாமாவட்டதேர்தல்

இந்த மாகாண சபைத் தேர்தலில் மலையக மக்கள் தங்கள் உரிமைக்கு எதிராக இருக்கும் யூ. என். பி. அரசுக்கும் அதற்குத்துணைபோகும் இ. தொ. காவுக்கும் தகுந்த பாடம்புகட்டுவர். மலையகத்தின் தேசிய எழுச்சிக்கும் மக்களின் விடுதலைக்காகவும் போராடும் சக்தியை தேனீர்க் கோப்பை சின்னத்தில் சுயேட்சைக்குழு 1ஐ (புதிய ஜனநாயகக் கட்சியை) வெற்றி பெறச்செய்வர்.

---

## பாதை திறப்பு எப்போது ?

யாழ் குடாநாட்டையும் நாட்டின் ஏனையபாகங்களையும் இணைக்கும் பாதுகாப்பானபாதைப் போக்குவரத்து ஒன்று ஏற்படவேண்டும் என்று யாழ் மக்கள் ஏங்கி எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த ஏக்கம் நியாயமானதே. இன்றி வட-கிழக்கில் குறிப்பாக யாழ் குடா நாட்டில் ஏற்பட்டுள்ள இராணுவ முற்றுகை நிலையில் வாழ்வதற்கு வழியின்றி இன்னல் படுகின்றனர்.

யாழ் மக்கள் தங்கள் ஜீவனோபாயத்திற்கு நிவாரணத்தை நம்பிமாத்திரம் இருக்க முடியாது. நிவாரணம் அம்மக்களின் தேவையின் சிறு அளவாகவே இருக்கின்றது. அவர்கள் குடா நாட்டைக் கடந்து நாட்டின் மற்றய பகுதிகளில் உழைத்து வாழ விரும்புகின்றனர்.

தமது சொந்தஇடங்களில் வாழும் உரிமை பறிக்கப்பட்டு -தொழில் செய்யும் உரிமை பறிக்கப்பட்ட மக்கள் வெளியே சென்று உழைத்து வாழ பயணம் செய்யக் கூடிய பாதையைக் கூட தடுத்து வைத்திருக்கின்றது.

மக்களுக்கு வசதியான பாதையொன்றை - கேரதீவு சங்குப்பிட்டி பாதையை திறப்பதற்கான முயற்சிகளை யூ. என். எச். சீ. ஆர். மேற்கொண்டு வருகிறது. மக்களுக்கு வசதியான ஒரு பாதையை ஏற்பாடு செய்ய - மக்களுக்கு வசதி செய்ய மறுத்துவரும் அரசு எவ்வாறு இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றினை கொண்டுவரப்போகின்றது;

இராணுவ வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றும் அரசு அவ்வெற்றியின் மூலம் எதனைச் சாதிக்கப் போகின்றது. மக்களற்ற ஒரு பகுதியை மீட்கப்பட்ட பிரதேசம்' என்று நாமம் போட்டு வைத்திருப்பதைத் தவிர. மக்களின் அச்ச மற்ற- பயணத்தை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்ய அரசு முன் வரவேண்டும்.

---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அவ்வாறான அரசியற்படுகொலைகளை தடுக்க அரசாங்கமோ நாட்டின் அரசியற் கட்சிகளோ நாட்டின் பிரஜைகளோ ஆக்கபூர்வமான பங்களிப்பு எதனையும் செய்யவில்லை. குறிப்பாக நாட்டின் அமைதிக்கு அச்சுறுத்தலாக இருந்துவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. நிலவும் ஜனநாயக மறுப்பு சூழ்நிலையை மாற்ற நடவடிக்கைகள் 'மேற்கொள்ளப்படவில்லை..

இவ்வாறான அரசியற்படுகொலைகள் நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற நிலைமையையே தோற்றுவிக்கும். அந்நிய நாடுகளும், அந்நிய சக்திகளும் எமது நாட்டு விவகாரங்களில் தலையிடவும் எமது நாட்டின்சுதந்திரம் இறைமை, சுயாதிபத்தியம், என்பவற்றுக்கு அச்சுறுத்தல் ஏற்படவுமே வழியேற்படும்.

எனவே ஆரோக்கியமான ஜனநாயக சூழ்நிலையை ஏற்படுத்தவும், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவும் சகலரும் பாடுபட வேண்டும்.

# மாகாணசபைத் தேர்தல் சாதிக்கப் போவது என்ன

இலங்கை-இந்திய ஒப்பந்தம் உருவாக்கியதே மாகாணசபையாகும். இனப்பிரச்சினையின் தீர்வுக்கு இந்தியத் தரப்பால் வற்புறுத்தப்பட்டு ஜே. ஆரினால் ஏற்கப்பட்ட இவ் மாகாணசபையால்இனப்பிரச்சினை எள்ளளவும் தீர்க்கப்படவில்லை. அது பிரச்சினையைமேலும் சிக்கலடையச் செய்தது மட்டுமன்றி இறுதியில் வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைக்கப்படவும் செய்தது வேடிக்கையாதெனில் ஏனைய ஏழு மாகாணசபைகளும் இன்னலின்றி இயங்க வைக்கப்பட்டன. அவற்றின் ஆட்சிப் பொறுப்பு யாவும் அரசாங்கக் கட்சியின் கரங்களில் இருந்ததால் முதலமைச்சர்கள், அமைச்சர்கள், உறுப்பினர்கள் யாவரும் சுகம் அனுபவிக்க கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக ஏழு மாகாணசபைகளையும் அரசாங்க கட்சி பிரசார மையங்களாகப் பயன்படுத்தியும் வந்தது. அரசியல் அமைப்பு வாயிலாக மாகாணசபை முறை வலுப் பெற்றிருந்ததால் ஜனாதிபதி பிரேமதாசா அதனை எளிதில் நிராகரிக்க முடியாத சூழலில்பயன்படுத்த தீர்மானித்தார். ஏனெனில் மாகாணசபை முறைவந்த போது அவர் அதற்குதனது பின்முதுகைக் காட்டியவராவர். அதற்கு அவர்கூறிய காரணம் அதற்கு அதிகாரங்கள் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது என்பதே யாகும். அவரது நிலைப்பாடு மாவட்டசபைகளுக்கு வழங்கிய அதிகாரத்திற்கு மேல் எதுவும் கொடுக்கக் கூடாது என்பதாகும். இப்படிப்பட்ட பிரேமதாசாவிடம் தான் சில தமிழர் குழுக்கள் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வை எதிர்பார்க்கின்றன என்பது மற்றொரு வேடிக்கையாகும்;

இது ஒருபுறமிருக்க மாகாணசபை இதுவரைகாலமும் சாதித்தது யாது என்ற கேள்வியை எழுப்பினால் பூச்சியம் தான் மிச்சம். ஏழு மாகாண சபைகளின் ஊடாக அபிவிருத்தி என பெரும் கூப்பாடு வைக்கப்பட்டது. ஆனால் அப்படி ஒரு அபிவிருத்தியும் ஏற்படவில்லை. தனியார் மயத்துக்கும், தனியார் கொம்பனிகளுக்கும் தரகு வேலையைத் தான்மாகாணசபை செய்ததே அன்றி வேறுஎதையும் சாதிக்கவில்லை. மாகாணசபைக் கூட்டங்களில் வாதிப்பிரதிவாதங்கள் சுவாரசியமாக இடம் பெற்றன என்பது உண்மை தான். எதனையும் சாதிக்க எம்மால் முடியவில்லையே என ஆளும் தரப்பினர் கை விரித்த காட்சிகளையேமக்கள் காணக் கூடியதாக இருந்தது. மூன்று மாகாணசபைகளில் ஆளும் கட்சியுடன் அதன் கூட்டாளியான இ. தொ. கா பங்கு கொண்டு மாகாண அமைச்சர் பதவிகளையும்

(6ம் பக்கம் பார்க்க)

## நாங்க போடனும் ஓட்டு - தேனீர் கோப்பை சின்னத்தைப் பாத்து!

கதிரவேல்:-

எவன் எவனோ வந்து எங்க ஓட்ட வாங்கிக் கிட்டு போயி எங்களுக்கு ஒண்ணும் செய்யலியே!

முத்துசாமி:-

மாகாணசபை தேர்தல் வேற வருது! யாருக்கு ஓட்டப் போடுறது.

கதிரவேல்:-

10-15 வருஷமா அரசியல் செஞ்சுவார புதிய ஜனநாயக கட்சி தேர்தலுல போட்டி போடாதான்னு கேட்டோம்!

முத்துசாமி:-

அவுங்க என்ன சொன்னாங்க?

கதிரவேல்;-

அவுங்க என்ன சொன்னாங்களா? அவுங்க தானே 'தேனீர் கோப்பை' சின்னத்தில சுயேட்சைகுழு ஒண்ணி-ல நூரளை மாவட்டத்தில போட்டிபோடுறாங்க

முத்துசாமி;-

அவுங்க இவவளவு காலமா போட்டி போடலியே இப்ப எப்பிடி போட்டிப் போடுறாங்க.

கதிரவேல்:-

தேர்தல போட்டிப் போடுற அரசியல் கடமையையும் நேர்மையான அரசியல் செய்யுற அவுங்களே பொறுப்பேற்கனும்னு நூரளை மாவட்ட மக்கள் விருப்பத்தை அறிஞ்சே அவுங்க போட்டி போடுறாங்க.

முத்துசாமி:-

நம்ம அடக்கிற யூ, என். பி.க்கும் அதுக்கு துணைப்போற இ. தொ. கா.விற்கும் எதிராக ஏழு பேர் ஏழு பக்கம் நின்னு போட்டிப் போடுறாங்களே.

கதிரவேல்:-

என்ன செய்ய? எப்பவும் நம்ப இடதுசாரி நண்பர்களுக்குள்ளேதானே போட்டியும் பூசலும் அதிகம். புதிய ஜனநாயக கட்சி, மலையக மக்கள் கட்சிகள் எல்லாம் ஒண்ணுப்பட்டு போட்டிப் போடனும், மக்களின் கோரிக்கையை பொதுவா வச்சு ஒன்னு சேரனும்னு கேட்டு வந்திச்சு.

எல்லாம் ஐக்கியம்னு கதைச்சாங்க. ஆனா ஒன்னு சேரல. அதான் புதிய ஜனநாயக கட்சி தனியாபோட்டிப் போடுது.

முத்துசாமி:-

ஆமாண்ணே எல்லாம் சும்மா கதைப்பாங்க. ஆனா ஐக்கியப்படமாட்டாங்க.

கதிரவேல்:-

ஆனா, புதிய ஜனநாயகக் கட்சி அப்படி இல்ல. அவுங்க சொன்னதை செய்வாங்க. அவுங்க உண்மையாகவே எல்லாத்தையும் ஒன்னு சேர்க்க முயற்சி செய்திருக்காங்க, மத்தவங்க நேர்மையாக ஒத்துவரல.

கதிரவேல்;-

அப்புடீன்னா நாம அப்படி சரியான கொள்கையும், நடத்தையும் வச்சிருக்கவங்களுக்குத்தான் ஓட்டு போடனும்.

முத்துசாமி;-

அதத்தான் சொல்ல வந்தேன். 'போடுங்கையா ஓட்ட தேத்தன்னி கோப்பையை பார்த்து.'

கதிரவேல்;-

அவுங்களுக்கு வெற்றி கிடைக்கனும் அப்பத்தான் எங்களுக்கு எதிரான எங்கள ஏமாத்துற யூ. என். பி.க்கு ஒரு பாடம் படிச்சு கொடுக்கலாம்.

முத்துசாமி:-

நேர்மையில்லாத எல்லாத்துக்குமே பாடம் படிச்சு கொடுக்கலாம்.

முத்துசாமி - கதிரவேல்:-

தேத்தன்னி கோப்பைக்கே வெற்றி. தொழிலாளர்களுக்கே வெற்றி.

## சம்பவங்களும் அதன் போ.....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

### விசுவாசமுள்ள பிச்சைக்காரன்

மேலை முதலாளித்துவ நாடுகளின் சுரண்டலுக்கு வாய்ப்பான களமாக ரஷ்யாவை மாற்றியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் பரிஸ் யெல்ற்ஸினுக்கு எதிரான சக்திகளின் கைகள் வலுப்படக் கூடிய நிலைமை தோன்றியுள்ளது. தன்னை ரஷ்யாவின் சர்வாதிகாரியாக மாற்றும் யெல்ற்ஸினின் முயற்சிக்கு ரஷ்ய பாராளுமன்றம் முட்டுக்கட்டை போட்டாலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாததால் அவரைப் பதவியிறக்கும் முயற்சி தடைப்பட்டு விட்டது.

இனியும் பொறுத்தால் யெல்ற்ஸின் கவிழ்ந்துவிடக் கூடும் என அஞ்சிய மேலை முதலாளித்துவ நாடுகள் யெல்ற்ஸினுக்கு உதவ முந்துகின்றன. ஏப்ரல் மாதமுடிவில் யெல்ற்ஸின் நடத்தவுள்ள சர்வசன வாக்கெடுப்பிற்கு முன்னதாகவே அமெரிக்கா ''நிதி உதவி''யை அனுப்ப உடன்பட்டுள்ளது. யெல்ற்ஸின் கிளின்ற்றன் அரசாங்கத்திடம் எதிர்பார்த்த 100 கோடி டொலருக்கும் மேலாக இன் 50 கோடி டொலர் ,உதவி' வாக்களிக்கப்பட்டுள்ளது. பிற முன்னேறிய முதலாளித்துவ நாடுகளும் இன்னும் அதிக'உதவி' வழங்க முன்வருமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும் இவை ரஷ்யாவின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க உதவுமா என்பது ஐயத்துக்குரியது.

''அமெரிக்கா வழங்கும் இந்த உதவி அமெரிக்காவின் நலனைக் கருத்தில் கொண்டதே'' என்று யெல்ற்ஸின் சொன்னவார்த்தைகள் கவனிக்க வேண்டியவை. இது ஒரு ஒப்புதல் வாக்குமூலமா என்று தெரியவில்லை. ஏனோ யெல்ற்ஸின் மிகவும்சோர்ந்து தான் இருக்கின்றார்.

## உலகமே உங்கள் குப்பைத் தொட்டி

நச்சுத்தன்மையுடைய கழிவுப் பொருட்களை மூன்றாமுலக நாடுகளின் கொட்டுவது முன்னேறிய முதலாளித்துவ நாடுகட்கு வழமையாகி விட்டது. ஊழல் மிகுந்த மூன்றாமுலக அரசாங்கங்கள் உள்ளவரை இதை நிறுத்துவது கஷ்டம். அண்மையில் சோமாலியா நாட்டுக்குள் நிவாரணப் பொருட்கள் என்ற வடிவிற் கழிவுப்பொருட்கள் கொண்டு செல்லப் பட்டன. கொண்டு சென்றோர் இத்தாலியரா ஜெர்மனியரா என்று தெரியாமல் ஐ. நா. சபையின் பிரதிநிதிகள் தடுமாறுகிறார்கள்.

குப்பை கொட்டுவதற்கு மூன்றாம் உலகம் மட்டுமே தகுதி என்றில்லை. அண்மையில் ஜெர்மன் கம்பனிகள் அடையாளமிடப்படாத தகரங்களில் நச்சுக் கழிவுப் பொருட்களை அடைத்து ரொமானியாவுக்கும் அல்பானியாவுக்கும் அனுப்பின. இவை பசளை மருந்துகள் என நம்பி இவற்றைத் தமது வயல்களில் ரொமானியா விவசாயிகள் பரவியுள்ளார்கள்.

இதன் பாதிப்பு முழுவதும் எவ்வளவு கொடியது என்று தெரியச் சில வருடங்களாகலாம். மண்ணும் நீரும் நிரந்தர நச்சுததன்மை அடைவது பற்றிய அச்சங்கள் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் நிர்வாகிகளிடம் தெரிவிக்கப்பட்டன. இது பற்றிய கலந்தாலோசனையின் பின் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீதுநடவடிக்கை எடுக்கப்போவதில்லை என ஜேர்மனி தெரிவித்ததாகவும் இதுபற்றி அதிகம் செய்ய முடியாது என்று ஐரோப்பிய பொருளாதார சமூகம் கையை விரித்ததாகவும் தெரியவந்தது.

## நாடும் நாடோடிகளும்

ஐரோப்பாவிற் பல்வேறு நாடோடி இனத்தவர் (ஜிப்ஸிகள்) வாழ்கின்றனர். முதலாளித்துவ சமுதாயத்தின் விருத்தி இவர்களை மேலும் மேலும் வறுமையிற் தள்ளி வருகிறது. இவர்கள் வழமையாக முகாமிடும் நிலங்கள் படிப்படியாக இவர்கட்குமறுக்கப்படுகின்றன. கில்லறைத் திருட்டுக்களில் இவர்கள் ஈடுபடுவது உண்மை. ஆயினும் பெருங்குற்றங்களில் இவர்கள் ஈடுபடுவது இல்லை எனலாம் இவர்கட்கு எதிரான பகைமையுணர்வு ஐரோப்பிய நாடுகளில் அதிகம். கிழக்கு ஐரோப்பாவில் 'சோஷலிஸ' ஆட்சிகள் வீழ்ச்சியடைந்த பிறகு இவர்கட்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

மேற்கு ஐரோப்பிய பாசிஸவாதிகளின் தாக்குதல்கட்கும் இவர்கள் இலக்காகிறார்கள். முதலாளித்துவ நாடுகளில் பொருளாதார நெருக்கடி அதிகமாகும்போது சிறுபான்மையினரும் அயல் நாட்டவரும் தாக்குதல்கட்கு இலக்காவது வழமை. நாடோடிகட்கு எதிரான இன ஒழிப்பு நடவடிக்கைகள் கிழக்கு ஐரோப்பாவில் முக்கியமாக ரொமானியாவில், அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. இதில் அரசாங்கங்கள் நேரடியான பங்கு வகிக்கும் அபாயமும் உள்ளது;

# புதியபூமி
PUTHIYA POOMI

117, Lower St. Andrews place Colombo - 15.

May 10 - 1993


## கண்ணீர்ப் புகைக் குண்டுவீச்சுக்கு யார் பொறுப்பு?

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் திரு. அத்துலத் முதலியின் இறுதிக்கிரிகையில் கலந்து கொண்ட லட்சக்கணக்கான மக்களைக் கலைப்பதற்கு விமானத்தில் இருந்து கண்ணீர்ப்புகைக் குண்டு அடிக்கப்பட்டது நாகரிக சமுதாயம் வெட்கித் தலைகுனியக் கூடிய சம்பவமாகும்.

ஒரு சாதாரண மனிதனின் இறுதிக்கிரிகையில்கூட எவ்வித அசம்பாவிதங்களும் இல்லாமல் நடத்தி முடிப்பதே சாதாரண பாமரமக்களிடையேயும் காணப்படும் நாகரிகப் பழக்கமாகும்-

இறுதிக்கிரிகையில் கலந்துகொண்ட சனவெள்ளத்தைக் க்காணச்சகிக்காத சக்திகள் அக்கிரிகையை கலகத்தை உண்டு பண்ணி ஆதாயம் அடைய முயற்சி செய்துள்ளன. அந்தக் கலகத்தின் ஊடாக நாட்டில் பதட்டத்தையும் - வரவிருக்கும் மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைக்கவும் தமக்கு சாதகமான வேளையில் தேர்தலை நடத்தவும், தமது ரவுடித் தனத்தைக் காட்டி மக்களை வெருட்டி அடிக்கவும் கங்கணம்கட்டி நிற்கின்றன. அரசுக்குச் சொந்தமான விமானத்தின்மூலமே புகைக்குண்டு வீசப்பட்டது. இதற்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். விமானக் குண்டுவீச்சுக்கு தாம் பொறுப்பில்லையென விமானப்படைத் தலைமை அறிவித்துள்ளது,

அப்படியாயின் குண்டு வீசியது யார்? அந்த விமானம் எந்த நாட்டுக்கு சொந்தமானது? அதனை அனுமதித்தது யார்? திரு. அத்துலத் முதலியின் படுகொலைக்கும் வெளிநாடுகளுக்கும் சம்பந்தமுண்டா? விமானக் குண்டுவீச்சுக்கும் அரசுக்கும் தொடர்பில்லை யெனில் ஏன் லட்சக்கணக்கான மக்களின்மீது - ஒரு அரசியற் தலைவரின் இறுதிக்கிரிகையின் போது நடைபெற்ற இச்சம்பவம் பற்றிமேல் நடவடிக்கை எடுக்காது இருக்கின்றது-

வெறும் மறுப்பின்மூலம் இக்குண்டுவீச்சுக்கான பொறுப்பைப் தட்டிக்கழித்துவிட முடியாது இத்தகைய காட்டுமிராண்டித் தனமான நடவடிக்கைக்காக புதியபூமி தனது கண்டனத்தைத் தெரிவிக்கின்றது.

# அரசியல் படுகொலைகள் மூலம் சாதிக்க முடியாது

அரசியல் படுகொலைகளின் மூலம் அரசியல் நடவடிக்கைகளை தடுக்கும் நாகரிகமற்ற நடவ்டிக்கைகளை ஜனநாயக தேசபக்தி சக்திகள் எதுவும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்நடவடிக்கைகளை புதிய ஜனநாயகக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. இவ்வாறு புதிய ஜனநாய்கக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் மத்திய மாகாணம் நுவரெலிய மாவட்ட சுயேட்சைக்குழு 1ன் தலைவருமான தோழர் இ. தம்பையா தனது பத்திரிகை அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது;- ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் திரு. அத்துலத் முதலி சுட்டுக் கொல்லப்பட்டது ஜனநாயகத்துக்கான அச்சுறுத்தலாகும். அரசு எதிர்க்கட்சியினரின் பாதுகாப்பினை அலட்சியம் செய்வதன்மூலம் மீண்டும் ஜனநாயக நடவடிக்கையை குழிதோண்டி புதைத்துள்ளது. சுதந்திரமாக தேர்தல் நடத்துவது என்று அரசு எவ்வளவுதான் கூப்பாடு போட்டாலும் இந்த நடவடிக்கை எதிர்க்கட்சிகளின் சுதந்திரமான நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாகவே இருக்கிறது.

வெறுமனே விடுதலைப் புலிகளின் மீதோ தமிழர் மீது திசையைத் திருப்புவதன் மூலம் அரசு தப்பிக்க முயல்வது விசனத்துக்குரியது. இது இனங்களுக்கிடையில் மோதல்களை உருவாக்குவதற்கு வழி செய்யும் செயல்பாடேயன்றி வேறொன்றுமாக இருக்க முடியாது. இதன்மூலம் அரசு தனக்கு எதிராக உள்ள மக்களின் எழுச்சியை திசை திருப்பிவிடப்பார்க்கிறது.

திரு. அத்துலத் முதலியின் அரசியல் கொள்கை கோட்பாடுகளுடன் கருத்து வித்தியாசம் இருந்தாலும் அவரின் படுகொலையை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சாதாரண ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் இருந்து வளர்ந்து ஒரு அரசியற் தலைவரின் படுகொலை வரை சென்றுவிட்ட இந்த நடவடிக்கைக்கான பொறுப்பை அரசு எவ்விதத்திலும் தட்டிக்கழித்துவிட முடியாது.

இப்படுகொலையை யார் செய்தது? இதற்கு பின்னணி என்ன என்பதை சுதந்திரமான நீதியான விசாரணை மூலம் கண்டறியப்பட வேண்டும். குற்றவாளிகள் உரிய முறையில் தண்டிக்கப்பட வேண்டும்.

# பரந்த மக்கள் போராட்டத்தில் அணிதிரள்வீர்

கடந்த பதினைந்து வருட கால ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின் மக்கள் விரோத ஜனநாயக விரோத, தேச விரோதக் கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் எதிராகத் தமது வன்மையான கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்துக்கொள்ள இவ்வருடமேதினத்தில் தொழிலாளி வர்க்கமும், உழைக்கும் மக்கள் அனைவரும் முன்வரல் வேண்டும். அத்துடன் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தமது வாக்குகளை இன்றைய அரசுக்கு எதிராக அளிப்பதன் மூலம் மக்கள் தமது வன்மையான எதிர்ப்புணர்வலைகளை வெளிப்படுத்திக் கொள்வதற்கும் இம் மேதினத்தில் உறுதியெடுத்துக் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறுபுதிய-ஜனநாயக கட்சியின் மத்திய குழு சார்பாக அதன் தேசியஅமைப்பாளர் திரு. இ. தம்பையா மே தினத்தையொட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இந்த அரசாங்கம் தொடர்ச்சியாகக் கடைப்பிடித்து வரும் தாராள பொருளாதாரக்கொள்கையும் தனியார் மயப்படுத்தலும் கடும் நிபந்தனைகளுடன் கூடிய அந்நியக் கடன்களும் நாட்டின் பொருளாதார, அரசியல் சமூக கலாச்சாரத்துறைகள் அனைத்தையும் நாசம் செய்துள்ளன. இவற்றின் பாதகத்தனங்களை மறைக்கவும், நாட்டு மக்களின் கவனத்தை அவற்றின் மீது திரும்பாது வைத்திருக்கவுமே வடக்கு, கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் மீதான கொடூர யுத்தம் நீடிக்கப்படுகிறது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை மறுத்து இராணுவத் தீர்வை நாடி நிற்கும் இந்த அரசு கோடிக்கணக்கான ரூபாய்களை நாளாந்தம் யுத்தத்திற்குக் கொட்டித்தீர்வதுடன் பெறுமதி மிக்க உயிர் உடமைகளை அழித்து மக்களை அநாதைகள் ஆக்கும் நிலையைத்தொடர்கிறது. ஜனநாயக-மனித உரிமைகள் அப்பட்டமாக மீறபட்டுவருகின்றன. இதுவரை ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்ற பாரதூரமான உண்மை மிகச் சாதாரணமான தொன்றாகக் தட்டிக்கட்டிக்கழிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் இன்றைய அரசு பதவியில் இருப்பதற்கு எவ்வித அருகதையும் கொண்டதாக இல்லை என்பதையே மக்கள் கண்டு கொள்கின்றனர். எனவே இவ்வாட்சியை அதிகாரத்தில் இருந்து அகற்றும் பரந்த மக்கள் போராட்டங்களின் ஐக்கியப்பட்ட வெளிப்பாடாக எதிர்வரும் மேதினத்தில் அணிதிரள்வதுடன், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தமது வன்மையான எதிர்ப்பினை வெளிக்காட்டும் வகையில் தமது வாக்குகளை வழங்க வேண்டும் என எமது புதிய ஜனநாயகக்கட்சி மேதின வேண்டுகோளாக விடுக்கின்றது.

## மாகாண . . . .

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொண்டது. மத்திய மத்திய மாகாணத்தின் கல்வி அமைச்ராகத் தொண்டமான் மகன் இராமநாதன் வீற்றிருந்தார். அவரது காலத்தில் கூட மலையகத்தில் தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தை நிறுவ முடியவில்லை. கேட்டால்நான் என்ன பண்ணுறது? என்று திருப்பிக் கேட்கிறார் அந்தக் கல்வி அமைச்சர். கைதூக்குவோருக்கு சலுகைகள், பை தூக்குவோருக்கு பதவி உயர்வு, ஏன் என்று நியாயம் கேட்போருக்கு இடமாற்றம் இவற்றைத்தான் மாகாண அமைச்சரினால் செய்ய முடிந்ததே தவிர மலையகக் கல்வி மேம்பாடு அப்படியும் இப்படியும்தான்.

இத்தகைய லட்சணத்தில்தான் மீண்டும் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறப்போகிறது. ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியை பொறுத்து இத்தேர்தலை ஒரு நாடி பிடித்துப்பார்க்கும் சந்தர்ப்பமாகவே கருதுகின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு ஒத்திகை நடத்திப்பார்க்கிறது. எதிரணிக் கட்சிகளும் பலத்தைக்காட்ட இச்சந்தர்ப்பத்தை நாடி நிற்கின்றன. அரசாங்கம் பலமுனை எதிர்ப்புகளை எதிர்நோக்கி நிற்கின்றபோதிலும் வழமையான பின்பக்க வழிகளால் வெற்றியைக் காட்டிவிட முழுமுயற்சி செய்கிறது. தொண்டமான் அமைச்சராக இருந்துகொண்டே அரசாங்கத்தை சில சந்தர்ப்பங்களில் விமர்சனம் செய்யும்போது அவரது துணிவைப் பலர் வியந்து கொள்வதுண்டு. இதனையிட்டு ஆளும் கட்சியினர் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. ஏனெனில் இறுதியில் தொண்டமான் ஆளும் கட்சிக்குள் அடங்கி தனது வர்க்க நேசத்தை விசுமாகக் காட்டி நிற்பார் என்பதில் அவர்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை.

மாகாணசபை முறையில் யில் மக்கள் எவருக்கும் எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை என்பது வெளிப்படையானது. ஆனால் இன்றைய ஜனநாயக விரோத, மனித உரிமை விரோத, மக்கள் விரோத ஆட்சியின் கீழ் நடைபெறும் ஒரு தேர்தலில் மக்கள் கலந்து கொண்டு தமது கடுமையான எதிர்ப்பை தெரிவிக்க இத்தேர்தல் ஒரு தகுந்த சந்தர்ப்பமாகும். அதனைத் தகுந்த முறையில் அரச எதிர் பயன்படுத்தப் பட்டால் அது ஒன்றே மாகாணசபைத் தேர்தலில் உள்ள ஒரே ஒரு சாதகமான அம்சமாகும். இதற்கு மேலால் அதனால் எவ்வித பயனும் இல்லை.

இப்பத்திரிகை 117, கீழ் சென் அன்ரூஸ் இடம், கொழும்பு-15ல் வசிக்கும் இளையதம்பி தம்பையா அவர்களால் விவேகானந்தா மேடு, இல. 98ல் உள்ள சங்கர் சன்ஸ் அச்சகத்தில் 10-05-93ல் அச்சிட்டு வெளியிடப்பட்டதாகும்.